# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

**வணிகக் கல்வி I** | **இரண்டு மணித்தியாலம்**

கவனிக்கவும் :

* **எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
* இலக்கம் 1 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவிற்கு முன்னால் உள்ள புள்ளிக் கோட்டின் மேல் எழுதுக.
* இலக்கம் 31 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்குச் சுருக்க விடையினை உரிய புள்ளிக் கோட்டின் மேல் எழுதுக.
* எல்லாப் வினாக்களுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**1.** நவீன தொழில் நுட்ப இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடி உற்பத்தியின் விளைதிறனை அதிகரித்துக்கொள்ள முடியும். இவ்வாறான இயந்திராதிகளை உற்பத்தி செய்வதற்குரித்தான தொகுதியாக இருப்பது,

(1) முதன்நிலை அல்லது விவசாயத்துறையாகும்.
(2) இரண்டாம் நிலை அல்லது சேவைத்துறையாகும்.
(3) முதன்நிலை அல்லது கைத்தொழிற்துறையாகும்.
(4) இரண்டாம்நிலை அல்லது கைத்தொழில் துறையாகும்.
(5) மூன்றாம் நிலை அல்லது சேவைத்துறையாகும். (........)

**2.** மனிதனின் விருப்பங்கள் பல்வேறு வகைப்பட்டன. அவற்றை ஏற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக காரணி ஒன்றாக இருப்பது,

(1) வருமான மட்டம் (2) நடை உடை பாவனை (3) காலநிலைத்தன்மை
(4) சம்பள மட்டம் (5) பால் வேறுபாடு (........)

**3.** பின்வரும் அட்டவணையில் பல்வேறு வகையான பொருள்களும் அவற்றின் பண்புள் பலவும் காணப்படுகின்றன.

| பொருள்கள் | பண்புகள் |
|---|---|
| (A) இலகு | (1) விலையையும் குறியீட்டையும் ஒப்பிட்டுக் கொள்வனவு செய்யப்படும். |
| (B) கடை | (2) எண்ணங்கள் நுகர்வாக இருக்காது. |
| (C) கைத்தொழில் | (3) ஒப்பிட்டறியாது தொடர்ந்து கொள்வனவு செய்வர். |

பொருள்களில் காணப்படும் பண்புகளைச் சரியாகப் பொருத்தும்போது காணப்படும் விடையாக அமைவது.

(1) A-1, B-2, C-3, (2) A-2, B-1, C-3, (3) A-3, B-1, C-2,
(4) A-2, B-3, C-1, (5) A-3, B-2, C-1, (........)

**4.** வணிகமொன்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தும் அண்மிய சூழல் காரணியாக இருப்பது,

(1) உரிமையாளராவர். (2) போட்டியாளராவர்.
(3) நிலையான முதலீட்டாளர்களாவர். (4) வாடிக்கையாளராவர்.
(5) வழங்குநராவர். (........)

**5.** வணிகத்தின் வளர்ச்சியும் அதனுடன் தொடர்புடைய உள்ளீடுகளுள் பல கீழே தரப்பட்டுள்ளன.

(A) நேர் உற்பத்தியில் வணிகங்களைக் காண முடியாது.
(B) நேரில் உற்பத்தியின்போது மேலதிக உற்பத்தியொன்றைக் காணமுடியும்
(C) பல்லினத்தன்மை கொண்ட வணிகக் கட்டமைப்பினுள் வேறு பிரிவொன்றுக்குள் ஈடுபடுத்தப்படாமை.
(D) உழைப்புப் பகிர்வானது சிறக்குமியல்பின் பெறுபேறொன்றாகும்.

இவற்றுள் சரியான கூற்றாக இருப்பது,

(1) A மட்டும். (2) A யும் B யும் மட்டும்.
(3) A யும் D யும் மட்டும். (4) B யும் C யும் மட்டும்.
(5) C யும் D யும் மட்டும். (........)

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க.

**6.** பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களும் அவ்வாறு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களும் தரப்பட்டுள்ளன.

| அக்கறை செலுத்தும் பிரிவினர் | அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் |
|---|---|
| (A) உரிமையாளர். | (1) பிணைகள் பாதுகாப்பானது. |
| (B) முகாமையாளர். | (2) கடனை மீள அறவிட்டுக் கொள்ளல். |
| (C) ஊழியர்கள். | (3) சந்தைப் பங்கு. |
| (D) வழங்குநர்கள் | (4) தொழில் திருப்தி |
| (E) கடன் வழங்குநர். | (5) கடந்தகால தீர்மானங்களின் வெற்றி |

அக்கறை செலுத்தும் பிரிவினர்களையும் அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் பொருத்தும்போது சரியாகக் கிடைக்கும் விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A-4, B-1, C-2, D-3, E-5
(2) A-3, B-4, C-1, D-5, E-2
(3) A-2, B-5, C-3, D-1, E-4
(4) A-1, B-2, C-3, D-4, E-5
(5) A-3, B-5, C-4, D-2, E-1 (........)

**7.** வரி வகைகள் சில பின்வருமாறு

(A) வருமான வரி
(B) (GST) பண்டச் சேவை வரி
(C) புறழ்வு வரி
(D) வரவுவரி
(E) செல்வ வரி
(F) உள்நாட்டுப் பண்டவரி

இதில் தற்போது நடைமுறையில் **இல்லாத** வரி வகைகளாக இருப்பது,

(1) D, E, F
(2) C, D, E
(3) A, D, F
(4) B, C, D
(5) B, D, E (........)

**8.** நிகழ்காலத்தில் உணவுக் குடிபானங்களை பொதியிடலுக்காகப் பரவலாக பிளாத்திக் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்குப் **பொருத்தமற்ற** பிளாத்திக் போத்தல்களில் இனங்காணக்கூடிய சரியான அடையாளமாக இருப்பது எது?

(1) 

(2) 

(3) 

(4) 

(5) 

(........)

**9.** பதிவு செய்தலுக்கும் சட்டத்தின் முன் தனிமனித அந்தஸ்துக்கும் இடையில் நேர்த்தன்மை ஒன்றைக் காண முடியாததாக இருப்பது

(1) வரையறுக்கப்பட்ட கம்பனிகளும் பங்குடமை வியாபாரமும்
(2) பங்குடமை வணிகமும் கூட்டுறவுச் சங்கங்கமும்
(3) வரையறுக்கப்பட்ட கம்பனிகளும் கூட்டுறவுச் சங்கங்களும்
(4) தனியாள் உடமை வணிகமும் பங்குடமை வணிகமும்
(5) பங்குடமை வணிகமும் அரச கூட்டுத்தாபனங்களும். (........)

**10.** முயற்சியாண்மை எண்ணக்கருவை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட துறைகளை மட்டும் உள்ளடக்கப்பட்ட விடையாக இருப்பது,

(1) யுத்த நடவடிக்கைகளும் போக்குவரத்தும்.
(2) தொடர்பாடலும் யுத்த நடவடிக்கைகளும்
(3) யுத்த நடவடிக்கைகளும் நிர்மாணப் பணிகளும்
(4) நிர்மாணப் பணிகளும் தொடர்பாடலும்
(5) தொடர்பாடலும் போக்குவரத்தும். (........)

**11.** ஆகில் என்பவர் இலங்கை வங்கி இரத்தினபுரியில் நடைமுறைக் கணக்கின் உரிமையாளர்களில் ஒருவராக இருக்க தாசன் என்பவர் மக்கள் வங்கி மொரட்டுவக் கிளையில் நடைமுறைக் கணக்கின் உரிமையாளராக இருக்கின்றார். தாசனினால் ஆகிலுக்கு பாதுகாப்பான முறையில் ரூ. 50 000 பெறுமதியான காசோலை ஒன்றை வழங்குவதற்கு எண்ணியுள்ளார். இப்பாதுகாப்புக் கோடிடலினுள் உள்ளடக்க வேண்டிய வங்கியின் பெயராக இருப்பது,

(1) இலங்கை வங்கி
(2) மக்கள் வங்கி
(3) இலங்கை வங்கி இரத்தினபுரி
(4) மக்கள் வங்கி மொறட்டுவ
(5) மக்கள் வங்கி இரத்தினபுரி (........)

PAPERMASTER.LK

**12.** வணிக அமைப்புகளுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(A) ஜயநாதன் அன்ட் கம்பனி (B) வரையறுக்கப்பட்ட பெரேரா (pvt)
(C) வரையறுக்கப்பட்ட சந்திரா கம்பனி (PLC) (D) வரையறுக்கப்பட்ட இனோக்கா

மேற்குறித்த உதாரணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வணிக அமைப்புகளை ஒழுங்குமுறையாகக் காட்டுவது,

(1) பங்குடமை வணிகம், வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, விலை குறிக்கப்படாததும் விலை குறிக்கப்பட்டதுமான கம்பனி
(2) பங்குடமை வணிகம், விலை குறிக்கப்படாத கம்பனி, விலைகுறிக்கப்பட்ட கம்பனியும் தனியார் கம்பனியும்
(3) விலை குறிக்கப்படாத கம்பனி, வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, பங்குடமை வணிகம், விலை குறிக்கப்பட்ட கம்பனி
(4) பங்குடமை வணிகம், வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, விலை குறிக்கப்பட்ட கம்பனி, விலை குறிக்கப்படாத கம்பனி
(5) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, பங்குடமை வணிகம், விலை குறிக்கப்பட்ட கம்பனி, விலை குறிக்கப்படாத கம்பனி (........)

**13.** காப்புறுதி தத்துவங்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(A) ஆதனம் இருப்பதன் மூலம் பொருளதார அனுகூலம் பெறுவதானது காப்புறுதி உரிமையாகும்.
(B) காப்புறுத்துவோன் காப்புறுதி ஆலோசனைகளை விளங்கிக் கொள்வது உச்ச நம்பிக்கை ஆகும்.
(C) உள்ளடங்காத இடர்களுக்காக இழப்பீடு வழங்காதிருப்பது இழப்பீட்டுத் தத்துவமாகும்.
(D) சீட்டாடல் காப்புறுதியில் இருந்து வேறுபடுவது அண்மிய காரணமாகும்.
(E) ஒப்புறுதிகளை கொள்வனவு செய்த பெறுமானத்திற்கு ஏற்றவாறு வீதங்களாக இழப்பீடு கொடுப்பது பங்களிப்பாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுகளில் சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?

(1) A, B, C மாத்திரம். (2) A, C, D மாத்திரம். (3) A, B, E மாத்திரம்.
(4) B, C, D மாத்திரம். (5) C, D, E மாத்திரம். (........)

**14.** நெகிழ்வுத்தன்மை கொண்ட போக்குவரத்து முறையொன்றாக இருப்பது,

(1) வான்வழிப் போக்குவரத்து முறையாகும். (2) பெருந்தெருப் போக்குவரத்து முறையாகும்.
(3) புகையிரதப் போக்குவரத்து முறையாகும். (4) நீர்வழிப் போக்குவரத்து முறையாகும்.
(5) குழாய்வழிப் போக்குவரத்து முறையாகும். (........)

**15.** ஊடகவியல் தொடர்பாடல்துறைப் பட்டதாரி ஒருவரான சான் புதிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளார். இந்நிறுவனத்தைப் பதிவு செய்வதற்காக அனுமதிப்பதிரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனம் எது?

(1) இலங்கை ரெலிகொம் கம்பனியாகும்.
(2) இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவாகும்.
(3) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமாகும்.
(4) தபால் தந்தி எண்மான (டிஜிடல்) உட்டகட்டமைப்பு வசதிகள் அமைச்சு
(5) கம்பனிப் பதிவாளர் அலுவலகம். (........)

**16.** பின்வரும் அட்டவணையின் X நிரலில் முகாமைத்துவ மட்டங்கள் மூன்றும் Y நிரலில் அதனுடன் தொடர்புடைய முகாமையாளர் பட்டியலும் தரப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| (A) உயர்மட்ட முகாமையாளர் | (1) மேற்பார்வையாளர். |
| (B) இடைமட்ட / மத்திம மட்ட முகாமையாளர். | (2) நிதி முகாமையாளர். |
| (C) கீழ்மட்ட முகாமையாளர். | (3) மனிதவள முகாமையாளர். |
| | (4) வேலை மூலம் |
| | (5) பிரதான நிறைவேற்று முகாமையாளர். |
| | (6) பொது முகாமையாளர் |

PAPERMASTER.LK

X, Y ஆகிய நிரல்களைப் பொருத்தும்போது உள்ள சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A-1, 2 B-3, 4 C-5, 6 (2) A-5, 6 B-3, 4 C-1, 2 (3) A-3, 5 B-2, 6 C-1, 4
(4) A-5, 6 B-2, 3 C-1, 4 (5) A-4, 6 B-2, 5 C-1, 3 (........)

[பக். 4 ஐப் பார்க்க.

**17.** பின்வரும் கூற்றுகளில் இருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) பதவி உயர்வு வழங்குதலும் உற்பத்திப் பொருள்களை சலுகை விலையில் வழங்குவதும் நீதிசார்ந்த தூண்டல் முறை ஒன்றாகும்.

(2) பதவி உயர்வு வழங்குதலும் சேவைக்கால பயிற்சி வழங்குதலும் நீதி சார்ந்த தூண்டல் முறை ஒன்றாகும்.

(3) பதவி உயர்வு வழங்குதலும் சேவையை கண்ணியப்படுத்துவதற்காக பதக்கம் வழங்குதலும் நீதிசாராத தூண்டல் முறை ஒன்றாகும்.

(4) உற்பத்திப் பொருள்களை சலுகை விலையில் வழங்கலும் பதவி உயர்வு வழங்குதலும் நீதிசாராத ஊக்குவிப்பு முறை ஒன்றாகும்.

(5) பதவி உயர்வு வழங்கல் சேவைக்காலப் பயிற்சி வழங்குதலும் நீதிசார்நத ஊக்குவிப்பு முறை ஒன்றாகும். (........)

**18.** பின்வரும் அட்டவணையில் உற்பத்தி முறைகள் மூன்றும் அதனுடன் இணைந்த பண்புகளும் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

| உற்பத்தி முறைகள் | பண்புகள் |
|---|---|
| (A) கட்டளை<br>(B) தொகுதி<br>(C) பாய்ச்சல் | (1) கிரயம் மிகக் கூடியதாக இருக்கும்.<br>(2) உற்பத்தி அளவு உயர்வாக இருக்கும்.<br>(3) சந்தையின் மொத்தக் கேள்வியில் அவதானம் செலுத்தப்படாதிருக்கும்.<br>(4) தொழிற் தேர்ச்சிக்கு முக்கிய இடம் கிடைக்கும்.<br>(5) நடுத்தரமான வள விரயம் காணப்படும்.<br>(6) கிரயம் மிகக் குறைவாகக் காணப்படும். |

மேற்காட்டப்பட்ட நிரல்களைச் சரியாகப் பொருத்தும்போது கிடைக்கும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A-1,2 B-3,4 C-5,6 (2) A-2,3 B-4,5 C-1,6 (3) A-1,4 B-3,5 C-2,6

(4) A-1,4 B-2,6 C-3,5 (5) A-5,6 B-1,2 C-3,4 (........)

**19.** அலகொன்றின் நிலையான கிரயம் ரூ. 50 ஆகும். மொத்த மாறும் கிரயம் ரூ 100 000 ஆகும். எதிர்பார்ப்பு உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 1000 ஆகும். உற்பத்தியாளர் விற்பனை விலையில் 25% இலாபம் பெறப்படுமாயின் இதில் சமப்பாட்டுப் புள்ளிக்குரிய அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(1) 50 அலகுகள். (2) 500 அலகுகள். (3) 2000 அலகுகள்.

(4) 5000 அலகுகள். (5) 50 000 அலகுகள். (........)

**20.** பொருளொன்றின் உற்பத்தி மட்டமும் அவற்றுக்குரிய உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| உற்பத்தி மட்டங்கள் | உதாரணங்கள் |
|---|---|
| (A) நேர் நலன்கள்<br>(B) அடிப்படை உற்பத்தி<br>(C) எதிர்பார்க்கும் உற்பத்தி<br>(D) விருத்தி செய்யப்பட்ட உற்பத்தி<br>(E) சக்தி மிக்க உற்பத்தி | (1) எதிபார்ப்பு இன்றி எழுதுதல்.<br>(2) எழுதியதன் பின்னர் பெற்றுக்கொடுத்தல்.<br>(3) பேனையினால் நேரத்தை அறிதல்<br>(4) பேனையினால் எழுதுதல்.<br>(5) பேனைக்கு வடிவமைப்பு ஒன்றை வழங்கல். |

உற்பத்தி மட்டங்களையும் உதாரணங்களையும் பொருத்தும்போது கிடைக்கின்ற சரியான விடைத்தொகுதியாக இருப்பது,

(1) A-5, B-4, C-3, D-2, E-1 (2) A-2, B-3, C-4, D-5, E-1 (3) A-4, B-2, C-3, D-1, E-5

(4) A-3, B-1, C-5, D-4, E-2 (5) A-4, B-2, C-5, D-3, E-1 (........)

**21.** பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றாக அமைவது,

(1) பொருள்கள் குறைக்கப்பட்டு குறைந்த விலையின் அடிப்படையில் விநியோகிக்கப் பட வேண்டும் என வழிகாட்டப்படுவது உற்பத்தி பொருள் எண்ணக்கருவாகும்.

(2) பொருள்களை அருமைப்படுத்துவது மட்டுமன்றி தரம் தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்படுவது உற்பதி எண்ணக்கருவாகும்.

(3) விருத்தி செய்வதனூடாக போட்டித் தன்மை கொண்ட சந்தையை வெற்றிகொள்ள முடியும் என்பதற்கு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவினூடாக வழிகாட்டப்படுகின்றது.

PAPERMASTER.LK

(4) நிறுவனத்தின் இயலுமை, வளங்கள் என்பனவற்றில் மட்டும் கவனஞ் செலுத்தி நுகர்வாளர் மீது கூடிய விற்பனை எண்ணக்கருவின் மூலம் அவதானம் செலுத்தப்படுகின்றது.

(5) நுகர்வவினையும் சாதகமான நீடிப்புத் தன்மையையும் பாதுகாக்கக் கூடியவைகளாகதேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதே சமூக சந்தைப்படுத்தல் எண்ணகருவின் மூலம் வழிகாட்டப்படுகின்றது. (........)

[பக். 5 ஐப் பார்க்க.

**22.** பொருளொன்றின் வாழ்க்கைச் சுற்றின் படிமுறைகள் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(A) அறிமுகப்படுத்தும் படிமுறையின்போது விற்பனையானது மிகவும் மெதுவாகவே அதிகரிக்கும்.

(B) முதிர்ச்சியடைந்த படிமுறைகளின்போதே விற்பனைகள் அதிகரிக்கும்.

(C) விருத்தியடையும் படிமுறையின்போது இலாபத்தில் அதிகரித்துச் செல்லும் போக்கைக் காண முடியும்.

(D) அபிவிருத்திப் படிமுறையின் போதே வருமானம் உயர்வடையும்.

(E) இலாபம் குறைவடைந்து செல்லல் பலவீமான படிமுறையின்போதே இடம்பெறும்.

மேற்குறிப்பிட்டப்பட்டுள்ள கூற்றுகளில் சரியான கூற்றுக்கள் உள்ளடக்கப்படும் தொகுதியாக இருப்பது.

(1) A, B ,C (2) B, C, D (3) B, D, E
(4) A, C, E (5) C, D, E (........)

**23.** நிதி முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்புடைய கூற்றுக்கள் பல கீழே தரப்படுகின்றது.

(A) வணிக நவீனப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்படும் கிரயம் நீண்டகால முதலீடொன்றாகும்.

(B) கம்பனித் தொகுதிக்கடன் வழங்குவது குறுங்கால நிதிமூலமொன்றாகும்.

(C) கடன்பட்டோர் தொடர்புடைய தீர்மானம் எடுப்பது குறுங்கால முதலீடொன்றாகும்.

(D) கொடுப்பனவைத் தாமதப்படுத்துவது நீண்டகால முதலீட்டுத் தீர்மானமொன்றாகும்.

மேற்கூறிய கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை மட்டும் உள்ளடங்கிய தொகுதியாக இருப்பது.

(1) A, D மாத்திரம். (2) A, B மாத்திரம். (3) C, D மாத்திரம்.
(4) B, C மாத்திரம். (5) A, C மாத்திரம். (........)

**24.** நிதி ஈட்டல் வழிமுறைகள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்படுகின்றது.

(A) வங்கி மேலதிப் பற்றொன்றைப் பெற்றுக்கொள்வது நேர் நிதியீட்டல் வழிமுறையொன்றாகும்.

(B) தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்குவது உயர் இணைப்பு மூலதனக் கட்டமைப்புடன் கூடிய வணிகமொன்றிற்கு அனுகூலமானதாகும்.

(C) சாதாரண பங்குகளை வழங்குவது கூடிய இலாபம் பெறும் வணிகங்களுக்குப் பொருத்தமற்றது.

(D) மேலதிக சொத்துக்களை விற்பனை செய்வது அகரீதியான நீதியீட்டல் வழிமுறையொன்றாகும்.

மேற்கூறிய கூற்றுக்களில் **உண்மையான பொய்யான** கூற்றுக்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையாக இருப்பது,

(1) A, B யும் C, D (2) B, C யும் A, D (3) C, D யும் A, B
(4) A, D யும் B, C (5) A, C யும் B, D (........)

**25.** நீண்டகால நிதித் தேவைப்பாடுடைய பிரிவினர்கள் தமது நிதித் தேவைப்பாட்டினை நிறைவு செய்து கொள்ளும் சந்தை எவ்வாறு அழைக்கப்படும்?

(1) நிதிச் சந்தை (2) பணச் சந்தை (3) மூலதனச் சந்தை
(4) இரண்டாம் நிலைச் சந்தை (5) முதலாம் தரச் சந்தை (........)

**26.** தொழில் விபரம், தொழில் நியமம் என்பவற்றில் காணக்கூடிய பொதுவான பண்பொன்றாவது,

(1) தகைமைகள் (2) தொழிற்பாடுகள் (3) சம்பள அளவுத்திட்டம்
(4) பொறுப்புக்கள் (5) பதவியின் பெயர் (........)

**27.** நிறைவேற்று அதிகாரியொருவரை நிகழ்காலத் தரத்திலிருந்து உயர் தரத்திற்குப் பதவி உயர்த்தும்போது சிரேஷ்ட நிலைமை அனேகமாகக் கவனம் செலுத்தப்படுவது,

(1) மொத்த சேவைக்காலத்தையாகும். (2) நிகழ்காலத் தரத்தின் சேவைக் காலத்தையாகும்.
(3) மேலும் சேவை செய்யக் கூடிய காலத்தையாகும். (4) லீவு பெறப்பட்டுள்ள காலத்தையாகும்.
(5) சேவைக்காலப் பயிற்சிச் காலத்தையாகும். (........)

**28.** மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் சரியான கூற்றாக இருப்பது

(1) அமர்த்துதல் என்பது எண்ணக்கரு ரீதியான திறன்களைப் பெற்றுக்கொடுத்தலாகும்.

(2) விருத்தி என்பது ஊழியர்களின் பொருத்தப்பாட்டினை அறிந்துகொள்வதைக் குறிக்கும்.

(3) தொழில் நியமம் என்பது ஊழியர்களுக்கு வேலைச் சூழலை அறிமுகப்படுத்துவதைக் குறிக்கும்.

(4) மேலதிக வேலை நேரம் என்பது ஊழியரொருவர் காட்டாயமாக வேலை செய்ய வேண்டிய சேவைக்காலத்தைக் குறிக்கும்.

(5) சவைக்காலப் பயிற்சிச் என்பது ஊழியரொருவர் தொழில் நிரந்தரமாக்குவதற்கு முன்னரான காலப்பகுதியைக் கொண்டதாக இருக்கும் (........)

PAPERMASTER.LK

**29.** பின்வருவனவற்றுள் சிறந்த தகவலொன்றில் இருக்க வேண்டிய பண்புகளின் தொகுதியைக் கொண்ட விடையாக இருப்பது,

(1) பொருத்தப்பாடுடையது என / சரியானது என/ பூரணமானது என/ கிரயம் குறைவானது என
(2) பொருத்தப்பாடுடையது என / சரியானது என / பூரணமானது என / சவால்களை எதிர்கொள்ளக் கூடியது என
(3) சரியானது என / முழுமையானது என / போட்டித்தன்மை கொண்டது என / தரமானது என
(4) முழுமையானது என / போட்டித்தன்மை கொண்டது என / கிரயம் குறைவானது என / தரமானது என
(5) பொருத்தப்பாடுடையது என / சரியானது என / கிரயம் குறைவானது என / தரமானது என (........)

**30.** வணிகத்திட்டத்தின் உள்ளடக்கமும் அவற்றுக்குரிய சில விளக்கங்களும் கீழே தரப்படுகின்றது.

| உள்ளடக்கங்கள் | விளக்கங்கள் |
|---|---|
| (A) நிறைவேற்றுச் சுருக்கம் | (1) வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் விசேட அனுகூலங்கள் |
| (B) வணிக விபரம் | (2) போட்டியாளர்களின் தந்திர உபாய முறைகள் |
| (B) சந்தைப்படுத்தல் திட்டம் | (3) சூழல் தாக்கம் |
| (C) செயற்பாட்டுத் திட்டம் | (4) திட்டம் தொடர்பான வழிகாட்டலொன்றை பெற்றுக்கொடுத்தல். |
| (D) மனிதவளத் திட்டம் | (5) அமைப்புக் கட்டமைப்பும் குறிப்பும். |

வணிகத்திட்டத்தின் உள்ளடக்கத்தையும் விளக்கங்களையும் சரியாகப் பொருத்தும் போது கிடைக்கப்பெறும் விடையாக இருப்பது

(1) A-1, B-2, C-3, D-4, E-5 (2) A-3, B-4, C-5, D-1, E-2 (3) A-2, B-3, C-4, D-5, E-1
(4) A-4, B-5, C-1, D-2, E-3 (5) A-4, B-1, C-2, D-3, E-5 (........)

- **வினா இலக்கம் 31 இலிருந்து 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது பொருத்தமான பதங்களைப பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக**

**31.** (அ) வணிகமொன்றின் ஆரம்பத்திற்கும் வாழ்தன்மைக்கும் தேவையான அகரீதியான பிரிவினர்கள் ............................ இருப்பதுடன் வணிகத்தின் வாழ்தன்மைக்கு உரிய புறப் பிரிவினர்களாக இருப்பது ...................................

(ஆ) வணிகமொன்றின் பலங்கள் பலவீனங்களை இனங்காணக்கூடியதாக இருப்பது ........................................ சூழலை அறிந்துகொள்வதன் மூலமாக இருப்பதுடன் வணிகத்தின் புறச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் ..................................................... உம் ................................................ இனங்காண முடியும்.

**32.** (அ) அரச செலவுகளை ......................................உம் ..................................... என வகைப்படுத்தப்படுவதுடன் அரச வருமானங்களை ............................. உம் .......................................... என வகைப்படுத்தப்படும்.

(ஆ) அகச் சூழல் பகுப்பாய்வின்போது செயற்றிறன் கொண்ட வெற்றிகரமான தலைமைத்துவமானது வணிகமொன்றின் ....................................................... ஆக இருப்பதுடன் திறமையற்ற ஊழியர்கள் இல்லாமல் இருப்பதும் வணிகமொன்றின் ........................................... ஆகும்.

**33.** (அ) நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் கீழ் நுகர்வோர் தொடர்பான அதிகாரியானது ........................ ................................. உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) உலக சர்வதேச தினம ........................................... ஆக இருப்பதுடன் உலக சுங்க தினம் ............... ............................................ ஆகக் காணப்படும்.

**34.** (அ) வரையறுக்கப்பட்ட பொறுப்பு சட்டரீதியான தனிமனித அந்தஸ்து என்பவற்றுடன் கூடிய தனியார் துறைக்குரிய இலாப நோக்கமற்ற வணிகமொன்றை ............................................ என அழைக்கப்படுவதுடன் சட்டரீதியான தனிமனித அந்தஸ்துடன் கூடிய இலாபம் பெரும் நோக்கத்தைக் கொண்ட அரச துறைக்குரிய அமைப்பொன்றாக ........................................... கருத முடியும்.

(ஆ) பங்காளர்களுக்கு பங்கிலாபம் வழங்குவதற்கு முன்னர் கடனைச் செலுத்துவதற்குரிய திறன் தொடர்பாக பரிசீலனையொன்று மேற்கொள்ள வேண்டி இருக்கும் வணிக அமைப்பு ................................................ என அழைக்கப்படும்.

PAPERMASTER.LK

**35.** (அ) தேசிய சேமிப்பு வங்கியானது உத்தரவு பெற்ற விசேட வங்கியொன்றாகக் காணப்பட்டாலும் கூட ............................................ நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

[பக். 7 ஐப் பார்க்க.

(ஆ) வங்கி மேலதிகப் பற்றைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கக் கூடிய பிணையினடிப்படையில் ……………… …………………… வும் ………………………………………… என வங்கி மேலதிகப் பற்றை வகைப்படுத்த முடியும்.

**36.** (அ) முகாமையாளரொருவர் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய திறன்கள் முன்வைக்கப்படுவது ………………………… என்பவராக இருப்பதுடன் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவத்தின் தந்தையாக ……………………………… என அழைக்கப்படும்.

(ஆ) பொருளுக்கான கட்டளை இடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து அவை களஞ்சியசாலைக்கு கிடைக்கும் வரையிலான காலத்தை ………………………………… என அழைக்கப்படும்.

**37.** (அ) இரட்டைப் பாத்திர முறைக்கமைய பாரியளவு பாத்திரத்தின் பொருள் முடிவடைதல் ………………………………… மட்டத்திற்கு உதாரணமாகக் காட்ட முடியும்.

(ஆ) மேம்படுத்தல் முறையில் கூடிய அக்கறை செலுத்தப்படல் வேண்டும் என்பதற்கு வழிகாட்டும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு ………………………………………………… என அழைக்கப்படும்.

**38.** (அ) வணிக நிறுவனமொன்றில் சேவை வழங்குனருக்கும் சேவையாளருக்குமிடையே ஏற்படும் தொழிலுக்குரிய சார்ந்தவைக்குமுரிய போராட்டத்தை ………………………………………………… என அழைக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரி கற்ற பாடசாலை, சமூக, குடும்ப நிலைமைகளை அறிவதற்கு ………………………………… பரிசோதனை நடாத்தப்படுவதுடன் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான திறனை …………………………… ……………… மூலம் பரிசோதனை செய்யப்படும்.

**39.** (அ) வணிகமொன்றின உரிமையாளரின் மூலதனத்தின் அளவு வரையில் கடன் மூலதன அதிகரிப்பினை ………………………………… என அழைக்கப்படும்.

(ஆ உயர்வான கடன் மூலதனமும் உயர்வான இலபத்தன்மையும் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றைவிடப் பொருத்தமான நிதியீட்டல் முறையாக இருப்பது …………………………… ஆகும்.

**40.** (அ) பூகோளமய ரீதியான பரம்பலுக்கமைய கணினி வலையமைப்பு ………………………………… உம் ………. ………………………… என வகைப்படுத்த முடியும்.

(ஆ) புற ரீதியான பிரிவினர்களை இலக்காகக் கொண்ட வணிகத் திட்டமொன்றின் மிக முக்கியமான பகுதியை …………………………… என அழைக்கப்படும்.

● **வினா இலக்கம் 41 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையளிக்கவும்.**

**41.** இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் துறைரீதியானஅமைப்பில் கைத்தொழில் துறையில் உட்படுத்தப்படும் துணைப் பிரிவுகள் எவை?


(1) ……………………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………………

(3) ……………………………………………………………………………………………………………

(4) ……………………………………………………………………………………………………………

**42.** கீழே காட்டப்பட்டிருக்கும் உற்பத்தி வகைப்படுத்தலை பூரணப்படுத்தவும்.




PAPERMASTER.LK

[பக். 8 ஐப் பார்க்க.

**43.** வணிக அமைப்புக்களை வகைப்படுத்தப்படுகின்ற அடிப்படைகள் **நான்கினைக்** குறிப்பிடவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**44.** நுகர்வோர் பொறுப்புக்கள் **நான்கினைக்** குறிப்பிடவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**45.** வணிக நிறுவனங்கள் பயன்படுத்தும் தொடர்பாடல் முறையொன்றான மின்னஞ்சல் முறை பிரபல்யமடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**46.** வணிகமொன்றின் வாழ்தன்மைக்கு வெற்றிகரமான நிதிக்கட்டுப்பாடொன்று தாக்கத்தை ஏற்படுத்தும் வணிக நிறுவனமொன்று நிதிக்கட்டுப்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் நிதிக்கட்டுப்பாட்டுக் கருவிகள் **நான்கைப்** பெயரிடுக.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**47.** வணிகமொன்றின் உத்தேச நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கட்டுப்பாட்டுச் செயன்முறை தேவையானதாகும். கட்டுப்பாட்டுச் செயன்முறைக்குரிய படிமுறைகள் **நான்கைக்** குறிப்பிடவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**48.** முகாமைத்துவக் கருமமொன்றாக திட்டமிடுதலில் பயன்படுத்தப்படும் அடிப்படைகள் **நான்கைக்** குறிப்பிட்டுக் காட்டவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**49.** மனிதவள முகாமைத்துவத்தில் ஊழியர் செயலடைவு மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தக் கூடிய நியதிகள் **நான்கைக்** குறிப்பிடவும்.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

**50.** இலாபத்தன்மை விகித வகைகள் **நான்கைப்** பெயரிடுக.

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

PAPERMASTER.LK

(3) ..........................................................................................................................................

(4) ..........................................................................................................................................

***

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

| வணிகக் கல்வி II | மூன்று மணித்தியாலம் |
|---|---|

**கவனிக்கவும் :**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது **இரு** வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்க.

## பகுதி I

**1.** (i) (அ) வெற்றிகரமான வணிகமொன்றில் காணப்படும் பணிகள் **நான்கைக்** குறிப்பிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(ஆ) வணிக நிறுவனமொன்று நடைமுறையில் முகங்கொடுக்கும் **நான்கு** அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுங்கள். (02 புள்ளிகள்)

(ii) (அ) "சேவை வழங்கும் வணிகமொன்றில் சேவைகளுக்காக அடிப்படையாக இருப்பது பொருள்களாகும்." உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பொருள்களுக்கும் சேவைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? (02 புள்ளிகள்)

(iii) (அ) உங்கள் பிரதேசத்தில் இருக்கும் சிற்றுண்டிச்சாலை ஒன்றின்மீது அக்கறை செலுத்தும் **நான்கு** பிரிவினர்களைப் பெயரிட்டுக் காட்டுங்கள். (02 புள்ளிகள்)

(அ) "வணிகம்" ஆனது அப்பிரிவினர்கள் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்கவும். (02 புள்ளிகள்)

(iv) (அ) "அநேக வணிகங்களில் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றுவதானது மறைவான விளம்பரமொன்றாகும் நிலைக்கு மாறியுள்ளது," உதாரணங்கள் மூலம் விளக்கவும். (02 புள்ளிகள்)

(ஆ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது வணிகமானது கவனம் செலுத்தும் பிரிவினர்கள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

(v) (அ) "வணிக விருத்திக்காக உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவது அரசின் அடிப்படைக் தொழிற்பாடொன்றாகும்.".அரசுமூலம் வழங்கப்படும் அவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகள் **நான்கினைப்** பெயரிடவும்.

(02 புள்ளிகள்)

(ஆ) வணிக வளர்ச்சியினூடாகப் பொதுவாக அனைத்து அரசுகளும் எதிர்பார்க்கின்ற பிரதான பொருளாதார நோக்கங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

**2.** (i) (அ) தேசிய நியம முறைமையொன்று செயற்படுவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினைப்** குறிப்பிடுங்கள். (02 புள்ளிகள்)

(ஆ) போட்டித் தன்மை கொண்ட வணிக நடவடிக்கைகளின் காரணமாக சந்தையில் இடம்பெறும் பல்வேறு மோசடி நடவடிக்கைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

**(1)** இவ்வாறான மோசடிச் செயற்பாடுகள் **இரண்டினைப்** பெயரிட்டுக் காட்டுக. (01 புள்ளி)

**(2)** இது தொடர்பாக நுகர்வாளர்களை அறியச் செய்வதற்காக உறிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வாளர் உரிமைகள் எவை? (01 புள்ளி)

(ii) சமூகத்தில் காணப்படும் சகல அமைப்புக்களும் வணிக அமைப்புக்களன்று.

(அ) வணிக அமைப்பொன்று அவ்வாறான அமைப்பொன்றிலிருந்து எவ்வாறு மாற்றமடைகின்றது?

PAPERMASTER.LK

(02 புள்ளிகள்)

(ஆ) அங்கீகாரம் பெறும் ஒருவரை நியமனம் செய்யும்போது அங்கீகாரமளிப்பவரினால் கருத்திற் கொள்ளப்படும் விடயங்கள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டவும். (02 புள்ளிகள்)

[பக் 2 ஐப் பார்க்க

(iii) 2007ம் ஆண்டு 07ம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய

(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்படக்கூடிய கம்பனி வகைகள் எவை? **(01 புள்ளி)**

(ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்காக வழங்கப்படும் சான்றிதழ் எது? **(01 புள்ளி)**

(இ) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்று வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாகப் பரிமாற்றம் செய்வதன் மூலம் பழைய பங்காளர்களுக்கும் கம்பனிக்கும் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(iv) (அ) "கூட்டுறவு விற்பனையகங்களுக்கு ஏனைய விற்பனையகங்களுடன் போட்டி இடுவது அச்சுறுத்தலொன்றாகும்." விபரிக்கவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) "முயற்சியாண்மையின் புதிய போக்கானது பிரதானதுறைகள் நான்கினூடாக செயற்படுகின்றது." அத்துறைகளைப் பெயரிடவும். **(02 புள்ளிகள்)**

(v) (அ) சிற்றளவு வணிகங்களுக்கு வணிகத்துறையின் எந்தளவிளான அதிகாரம் உரித்துடையதாக இருக்கின்றது என்பதைனை சுருக்கமாக வெளிவுபடுத்தவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) அநேக சிற்றளவு வணிகங்கள் வணிகத்தை ஆரம்பித்து குறுகிய காலத்தில் தோல்வியை அடைகின்றது. அவ்வாறு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**3.** (i) (அ) வணிக வங்கியொன்றிடம் காணப்படும் மிகை வைப்புத் தொகையை குறுங்காலத்திற்காக மத்திய வங்கியில் வைப்புச் செய்யும்போது செலுத்தப்படும் வட்டிவீத்தினைப் பெயரிட்டுக் காட்டவும். **(01 புள்ளி)**

(ஆ) உத்தரவு பெற்ற வணிக வங்கியொன்றிலும் உத்தரவு பெற்ற விஷேட வங்கியொன்றிலும் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த அடிப்படை மூலதனம் எவ்வளவு? **(01 புள்ளி)**

(இ) உத்தரவு பெற்ற வணிக வங்கியிலிருந்து உத்தரவு பெற்ற விசேட வங்கியானது எவ்வாறு வேறுபடுகின்றது? **(02 புள்ளிகள்)**

(ii) (அ) "கடன் தரப்படுத்தல்" என்பதன் மூலம் கருதப்படுவது யாது? **(02 புள்ளிகள்)**

(ஆ) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கடன் தரப்படுத்தல் செய்யும் நிறுவனங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக. **(02 புள்ளிகள்)**

(iii) (அ) காசோலையொன்றில் கோடிடக் கூடிய பிரிவினர்களைப் பெயரிட்டுக் காட்டவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) காசோலையொன்றின் கோடிடலை யாரால்? எவ்வாறு' இரத்துச் செய்ய முடியும்? **(02 புள்ளிகள்)**

(iv) (அ) காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றிற்கு இழப்பீடு செலுத்தும்போது கருத்திற்கொள்ளப்படும் நியதிகள் **இரண்டைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) பொறுப்புக் காப்புறுதி என்பது யாது? என்பதைக் குறிப்பிட்டு அதனடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகள் **இரண்டை** பெயரிட்டுக் காட்டுக. **(02 புள்ளிகள்)**

(v) இலங்கையின் போக்குவரத்து முறையில் போக்குவரத்து ஊடகங்கள் நாளுக்கு நாள் நவீனமயப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. போக்குவரத்து முறைமையில் வினைத்திறனை உயர்த்துவதற்கு நவீனமய மோட்டார் வண்டிகளை மட்டும் ஈடுபடுத்துவது போதுமானதாக உள்ளதா? விளக்கவும். **(04 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**4.** (i) (அ) வணிக நிறுவனமொன்றின் அக, புற ரீதியான தொடர்பாடல்களுக்குரிய பிரிவினர்கள் **இரண்டு** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுங்கள். **(02 புள்ளிகள்)**

(ஆ) வாய்மொழிமூலத் தொடர்பாடலின் அனுகூலங்கள், பிரதிகூலங்களை வெவ்வேறாகக் குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

(ii) (அ) சந்தையில் கருமமாற்றும் மொத்த வியாரிபாரிகளின் வகைகளைக் குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) மொத்த வியாபாரிகளினால் உற்பத்தியாளருக்கு வழங்கும் சேவைகள் எவை? **(02 புள்ளிகள்)**

(iii) (அ) வெளிநாட்டு வியாபாரத்திற்காக அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளைப் பெயரிடவும். **(02 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

(ஆ) சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையை ஏற்படுத்தும் சுங்கவரி அல்லாத காரணிகள் **நான்கினை** குறிப்பிட்டுக் காட்டவும். **(02 புள்ளிகள்)**

(iv) உள்நாட்டு ஆடை அணிகள் சந்தையில் பிரபல்யம் பெற்று நிலையான இடத்தைப் பிடித்திருக்கும் சந்திரிக்கா தனது உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் அனுப்புவதற்கு எண்ணி உள்ளார். அதனூடாக அவருக்குப் பெறக்கூடிய அனுகூலங்கைளயும் பிரச்சினைகளையும் விளக்கவும். **(04 புள்ளிகள்)**

(v) (ஆ) இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்குரிய கருமங்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) சர்வதேச வியாபாரத்திற்கு இருக்கும் தடைகளை இழிவுபடுத்தி அதன் இருப்பு நிலையை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் வலைய ரீதியான வியாபார ஒப்பந்தங்கள் **இரண்டையும்** அமைப்புக்கள் **இரண்டையும்** குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

## பகுதி II

**5.** (i) “வணிக நிறுவனமொன்றின் முகாமைத்துவ மட்டங்களுக்கும் முகாமையாளரொருவரின் திறன்களுக்குமிடையே கிட்டிய தொடர்பொன்று காணப்படுகின்றது.” விளக்கவும். **(04 புள்ளிகள்)**

(ii) (அ) “நிகழ்காலத்தில் வணிகச் சூழலானது விரைவாக மாற்றமடைவதனால் முகாமையாளர் பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.” இதற்காக முகாமையாளரொருவர் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய விசேட திறன்கள் **நான்கினை** பெயரிடவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) “முழுமையான முகாமைத்துவ செயல்முறையில் தீர்மானமெடுத்தல் மிக முக்கிய கருமமொன்றாகும். தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளுக்குரிய படிமுறைகளைக் குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**


(iii) (அ) செயற்படுத்தல் செயல்முறையில் உள்ளடங்கும் கருமமொன்றான ஊக்குவிப்பானது வணிகங்களுக்கு முக்கியத்துவமுடையதாக இருப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) கட்டுப்பாட்டுச் செயல்முறைகளில் முன்னூட்டலுக்கும் பின்னூட்டலுக்குமான கட்டுப்பாட்டிற்கான உதாரணங்கள் இரண்டு வீதம் தருக. **(02 புள்ளிகள்)**

(iv) (அ) செயற்படுத்தல் முகாமைத்துவமானது உற்பத்தி முகாமைத்துவத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைக் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) கட்டளைக் கிரயத்திலும் பராமரிப்புக் கிரயத்திலும் உள்ளடக்கப்படும் செலவுப்படிகள் இரண்டு வீதம் குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(v) உற்பத்தி நிறுவனமொன்றின் பல்வேறு இருப்பு மட்டங்களும் காலமும் பின்வரும் வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




இவ்வரைபடத்தில் $Q, Q_1, Q_2, Q_3, T, T_1, L, S$ எனும் எழுத்துக்களின் மூலம் வெளிப்படுத்திக் காட்டப்படுவது எது எனத் தனித்தனியாகக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

PAPERMASTER.LK

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**6.** (i) (அ) ஒழுங்கமைப்பின் படிமுறைகள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) வகைகூறலும் பொறுப்புக்களும் ஆகிய எண்ணக்கருக்களைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தவும். **(02 புள்ளிகள்)**

(ii) (அ) செயற்பாட்டுத்தள அமைப்புத் திட்டமிடப்படல் என்பதன் மூலம் குறிப்பிடுவது எது? **(02 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றின் தள அளவுத்திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. **(02 புள்ளிகள்)**

(iii) (அ) "பொருளொன்றின் தரம் பல உறுப்புக்களின் சேர்க்கையைக் கொண்டதாகும்" அதில் உள்ளடங்கும் உறுப்புக்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். **((02 புள்ளிகள்)**

(ஆ) சுருக்கக் குறிப்பெழுதுக.

1. மொத்தத்தர முகாமைத்துவம்
2. புள்ளிவிபர செயல்முறைக் காட்டுப்பாடு **(02 புள்ளிகள்)**

(iv) (அ) மொத்த சந்தைப்படுத்தல் செயல்முறையானது தங்கியிருக்கின்ற பிரதான அடிப்படைகள் **நான்கினைப்** பெயரிட்டுக் காட்டவும். **(02 புள்ளிகள்)**

(ஆ) "சந்தைப்படுத்தலின்போது விற்பனையாளராகக் கருதப்படுவது விற்பனையாளர் மட்டுமன்று " உதாரணங்கள் மூலம் விளக்கவும். **(02 புள்ளிகள்)**

(v) (அ) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கரு உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்களைத் தெளிவுபடுத்துக. **(02 புள்ளிகள்)**

(ஆ) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவிற்கும் வாடிக்கையாளர் எண்ணக்கருவிற்கும் இடையிலான தொடர்பினை" விளக்குக. **(02 புள்ளிகள்))**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**7.** (i) (அ) சந்தைப்படுத்தலைச் சுருக்கமாக விளக்குக. **(01 புள்ளிகள்)**

**(ஆ)** சந்தைத்தூண்டமாக்கல் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு விளைதிறன்கொண்ட சந்தைத் துண்டமாக்கலில் இருக்க வேண்டிய தேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

(ii) (அ) "சந்தைப்படுத்தல் கலவையில் விலை முக்கியமான மாறியொன்றாகும்". விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்திப் பொருளொன்றின் விலையைத் தீர்மானிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படும் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(iii) போட்டித் தன்மை கொண்ட சந்தையில் உற்பத்தியாளர் தமது உற்பத்திகளை வேறுபடுத்தி இனங்காண்பதற்குச் சின்னம் பயன்படுத்தப்படுகின்றது.

(அ) சின்னத்திற்கும் வியாபாரக் குறிக்குமிடையிலான வேறுபாடுகளையும் தொடர்புகளையும் விளக்கவும். **(02 புள்ளிகள்)**

**(ஆ)** சின்னமொன்றினால் உற்பத்தியாளருக்கும் வாடிக்கையாளருக்கும் கிடைக்கும் பயன்கள் **இரண்டு** வீதம் தருக. **(02 புள்ளிகள்)**

(iv) விளைதிறன் கொண்டதாக நிதியீட்டலைப் பெற்றுக்கொள்வதும் அவற்றைப் பயன்படுத்துவதும் நிதிமுகாமையாளரின் அடிப்படைப் பொறுப்பாக இருக்கின்றது.

**(அ)** நிதி முகாமையாளருக்குரிய கருமங்கள் **நான்கினைக்** குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

**(ஆ)** கம்பனிக்கு நிதியீட்டக்கூடிய அக, புற ரீதியான நிதியீட்டல் வழிமுறைகளுக்கான உதாரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிடவும். **(02 புள்ளிகள்)**

(v) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2015.01.01 இல் இருப்பு | ரூ.. 80 000 |
| 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு | ரூ. 60 000 |
| 2015.12.31 இல் இருப்பு | ரூ. 30 000 |

PAPERMASTER.LK

(அ) 2015 ஆம் ஆண்டில் கம்பனியின் இருப்புப் புறழ்வு விகிதத்தைக் கணிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) வரையறுக்கப்பட்ட A, B ஆகிய கம்பனிகள் இரண்டின் நிதித் தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | **A** (ரூ) | **B** (ரூ) |
|---|---|---|
| மூலதன முதலீடு | 300 000 | 120 000 |
| விற்பனை | 600 000 | 360 000 |
| தேறிய இலாபம் | 60 000 | 40 000 |

மேற்குறிப்பிடப்பட்ட A, B ஆகிய இரு கம்பனிகளினதும் இலாபத்தன்மை வீதத்தைக் கணிப்பிட்டு, மிகவும் வெற்றிகரமான கம்பனி எது என்பதைச் சுட்டிக் காட்டுக. **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

**8.** (i) (அ) மனிதவள முகாமைத்துவத்திற்குரிய கருமங்கள் **நான்கைக்** குறிப்பிட்டுக் காட்டுக **(02 புள்ளிகள்)**

(ஆ) இலத்திரனியல் ஈர்ப்பு என்பதன் மூலம் கருதப்படுவது யாது? அதன்மூலம் நிறுவனத்திற்குக் கிடைக்கும் அனுகூலங்கள் எவை? **(02 புள்ளிகள்)**

(ii) “வணிகத்தின் நோக்கத்தைச் செயற்றிறன் கொண்டதாக நிறைவேற்றிக் கொள்வதற்கு மனிதவளம் மிக முக்கியமானதாகும்.”

(அ) வணிகமொன்றில் காணப்படும் ஏனைய வளங்களுக்கு ஒப்பீட்டு ரீதியாக மனித வளங்களில் காணப்படும் விசேடத்துவம் **நான்கினைக்** குறிப்பிட்டுக் காட்டுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) ஊழியர் விளைதிறன் என்பதன் மூலம் யாது கருதப்படுகின்றது? **(01 புள்ளி)**

(இ) இணக்கப்பாட்டுடன் ஒன்றான ஒப்பந்தமொன்று என்பதனை விளக்கவும். **(01 புள்ளி)**

(iii) (அ) தொழிற்சங்கங்கள் உருவாவதற்கான உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும் தொழிற்சங்கங்களை உருவாக்க முடியாத தொழில் துறைகள் இரண்டின் பெயர்களைத் தருக. **(02 புள்ளிகள்)**

(ஆ) தகவல் முறைமை என்பது யாது? விளக்குக. **(02 புள்ளிகள்)**

(iv) பயன்படுத்தப்படும் மட்டங்களின் பயன்பாட்டிற்கமைய தகவல் முறைமையின் வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(v) (அ) வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் வணிகமொன்றிற்குக் கிடைக்கக் கூடிய பயன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(ஆ) வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கும் நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய நிதிக் கூற்றினைப் பெயரிடுக. **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

***

PAPERMASTER.LK